**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**அசல் வழக்கு எண்.106/2015**

நாள்: 06.03.2026.

பெயர்: ராஜேந்திரன் (வா.சா.1) த/பெ: சுப்ரமணியன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

1) எனது தாத்தா பெயர் பெரியசாமி. பெரியசாமியின் தந்தை பெயர் சின்னசாமி. சின்னசாமியின் பிள்ளைகள் யார் யார் என்றால் 1) பெரியசாமி, 2) நல்லமுத்து, 3) சாமிதுரை, 4) தங்கவேல் ஆவார்கள், மேற்படி நான்கு நபர்களும் பாகம் பிரித்துக்கொண்டனரா என்றால் பிரித்துக்கொண்டனர். மேற்படி பாகத்தை அவர்கள் பதிவு செய்துக்கொண்டார்களா என்றால் எனக்கு தெரியாது, ஆனால் அவரவர்கள் பெயரில் பட்டா மட்டும் உள்ளது. நான் பிறப்பதற்கு முன்பே அவர்கள் பாகம் பிரித்துக்கொண்டனரா என்றால் சரிதான். எனக்கு தற்போது 55 வயது ஆகிறது. எனது தந்தை இறக்கும் போது அவருக்கு 70 வயது. பாகம் பிரித்துக்கொண்டது எனது தாத்தா காலத்திலேயே என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு மீனாட்சி ஏரி என்ற இடத்தில் சொத்து இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. ஆதியில் எங்கள் முன்னோர்கள் மீனாட்சி ஏரிக்கரையில் குடியிருந்து வந்து, அங்கு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் வீடு அடித்து செல்லப்பட்டதால் தற்போது குடியிருக்கும் இடத்திற்கு குடிபெயர்ந்துள்ளனர் என்றால் தெரியாது.

2) நான் தற்போது குடியிருந்து வரும் இடத்திற்கு பின்புறம் (தெற்கில்) நிலமாக உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு வடபுறம் ஜெயங்கொண்டம் – திருச்சி சாலை உள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா பெரியசாமிக்கு எனது தந்தை சுப்ரமணியன் மட்டுமே ஆண் வாரிசு ஆவார். எனது நடு தாத்தா நல்லமுத்துவிற்கு கிருஷ்ணமூர்த்தி மட்டுமே வாரிசு ஆவார். எனது மூன்றாவது தாத்தா சாமிதுரைக்கு ராஜேந்திரன் மட்டுமே ஆண் வாரிசு ஆவார், மேற்படி ராஜேந்திரனை சிண்டு என்று அழைப்பார்கள் என்றால் சரிதான், அவர் தான் இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி என்றால் சரிதான், அவர் தற்போது உயிருடன் இல்லை. 4ம் தாத்தா தங்கவேல் மகன் தான் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி பன்னீர்செல்வம் என்றால் சரிதான்.

3) எனது பாட்டனார் சின்னசாமி சொத்துக்களை அவரது மகன்களான நால்வரும் சமமாக பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால் சரிதான். மேற்படி பாகம் 100 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டது என்றால் சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டது, அப்போது எனக்கு வயது 10. மேற்படி பாகத்தில் யார் யாருக்கு எந்தெந்த பாகம் ஒதுக்கப்பட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எனது தாத்தா இறந்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா இறந்தபோது நான் பிறந்துவிட்டேனா என்றால் கைக் குழந்தையாக இருந்துருப்பேன். இவ்வழக்கை நான் நேரடியாக தாக்கல் செய்யவில்லை என்றாலும், எனது தந்தை தான் தாக்கல் செய்தார் என்றாலும் சரிதான். எனது தந்தை இறப்பிற்கு பின்பு நான் இவ்வழக்கை நடத்தியிருந்தேன்.

4) எனது தந்தை சுப்ரமணியனுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் நான் மட்டும் ஆவேன். எனக்கு ராஜகுமாரி என்ற தங்கை இருந்தார் என்றால் சரிதான், அவர் இறந்துவிட்டார். இவ்வழக்கில் எனது தந்தை இறந்தபிறகு நான் வாரிசாக சேர்க்கப்பட்ட போது எனது தாய் உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை, நான் எனது தாயார் மற்றும் தங்கை இருந்து இறந்தார்கள் என்ற விபரங்களை வாரிசு சேர்க்கை மனுவின் பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். எனது தந்தைக்கு என்னை தவிர எனது அம்மா மற்றும் எனது தங்கை ஆகியோர் வாரிசு என்ற விபரத்தை மறைத்துள்ளது போல் தான் இந்த தாவாவில் உண்மை சங்கதிகளை கூறாமல் பொய்யான சங்கதிகளை கூறி தாவா தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

5) எனது தாத்தா காலத்தில் எங்கள் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டது. மேற்படி பாகத்தை அனுசரித்து ரோட்டிற்கு தென்புறமாக அவரவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வீடு கட்டிக்கொண்டனர் என்றால் சரிதான். எனது தந்தை இவ்வழக்கை தாக்கல் செய்த போது நானும் அவருடன் சென்று வழக்கறிஞரை சந்தித்தேனா என்றால் இல்லை. எனது தந்தையும், 3ம் பிரதிவாதியான சிண்டு என்கிற ராஜேந்திரன் ஆகியோர் சேர்ந்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்தனர் என்றால் சரிதான். இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி சக்கரை என்பவர் கைக்களத் தெருவை சேர்ந்தவர், அவர் வசதியான குடும்பத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். கைக்களத்

தெரு, ஓடுகாளன் பட்டி, பொட்டான்காடு, மாந்தோப்பு ஒரே ஊரை சேர்ந்தது என்றால் சரிதான்.

**(1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/சு.ராஜேந்திரன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.